සත්ත්ව නිෂ්පාදන හා සෞඛ්‍ය දෙපාර්තමේන්තුව
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
Department of Animal Production and Health

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General +94-081-2388195
E-mail : dgdaph@sltnet.lk

කාර්යාලය / அலுவலகம் / Office +94 081-2388120 184/189/337/462
Web : www. daph.gov.lk

මගේ අංකය/எனது இலக்கம் : DAPH/AD/20/3/1 ඔබේ අංකය/உமது இலக்கம் : දිනය/திகதி : 2020.11.

பிரதான செயலாளர் (வடக்கு/கிழக்கு),

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வருடாந்த இடமாற்றம் - 2021**

மேற்போந்த விடயம் தொடர்பில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது தொடர் இலக்கம் DAPH/AD/20/3/1 மற்றும் 2020.08.24 ஆம் திகதிய கடிதம் சார்பாக.

02. அதற்கு அமைய இ.கா.உ.சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடமாற்றல் விண்ணப்பங்கள் 2020.10.23 ஆம் திகதியன்று ஒன்று கூடிய இடமாற்றல் சபையினால் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன், அச்சபையினால் இடமாற்றல்களுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபாரிசு கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளரது இலக்கம் SML/02/16/05(Vol-IV) மற்றும் 2020.11.18 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கு அமைய இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள உங்களது மாகாணத்திற்கு/அலகிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களது இடமாற்றல் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களை அறியக் கொடுத்து இடமாற்றல் பெற்றுள்ள உத்தியோகத்தர்களை உரிய சேவை நிலையங்களில் அறிக்கை செய்வதற்கு இயலுமாகின்ற வகையில் இடமாற்றல் செயற்படுவதற்குரிய திகதி முதல் விடுவிப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்புடன் அறியத் தருகின்றேன்.

04. அவ்வாறே இணைப்பு 01 இல் உரிய பெயரின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற திகதி முதல் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்கள் தவிர ஏனைய இடமாற்றங்கள் செயல்வலுப் பெறும் திகதி 2021.01.01 ஆகும்.

04. அவ்விணைப்பின் - 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களது மேன்முறையீடுகள் இருப்பின் அந்த மேன்முறையீடுகளை மாதிரி படிவ இலக்கம் iv இற்கு அமைய தயாரிக்கப்பட்டு, மாகாண அதிகாரிகளின்/அலகுப் பொறுப்பு பணிப்பாளரது சிபாரிசுகளுடன் இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் 14 நாட்களுக்குள் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் அறியத் தருகின்றேன். உரிய இலக்கம் iv இனைக் கொண்ட மாதிரி படிவத்தில் இடமாற்றல் பொருட்டு விண்ணப்பம் கோரப்பட்ட எனது தொடர் இலக்க DAPH/AD/20/3/1 மற்றும் 2020.08.24 ஆம் திகதிய கடிதத்தின் 05 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதள முகவரியில் www.daph.gov.lk இன் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். என்பதை அறியத் தருகின்றேன். அவ்வாறே மேன்முறையீடுகளின் தீர்மானங்கள் அறியத் தந்ததுடன் அந்த தீர்மானங்கள் தொடர்பில் அதிருப்தி அடைகின்ற உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்குவிதி 231 இற்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு மேன்முறையீடு (மாதிரிப் படிவம் v இற்கு அமைய தயாரித்து) மேற்கொள்ள முடியும் என்பதை அறியக் கொடுக்கவும்.

06. 2020.12.14 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறுகின்ற மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் ஏதோ ஒரு வகையில் மேன்முறையீடு கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய அதிகாரிகளினால் சமர்ப்பிக்கையில் தாமதம் ஏற்படுமேயாயின் மாகாண சபைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களது மேன் முறையீடுகளின் முதற் பிரதியை அனுப்பி வைப்பது முக்கியத்துவமாகின்றது என்பதை உத்தியோகத்தர்களுக்கு அறியக் கொடுக்கவும்.

ஒப்பம் : டாக்டர்.ஆர்.ஹெட்டியாரச்சி
கா.உ.சு.பணிப்பாளர் நாயகத்திற்காக.

பிரதி :

1. செயலாளர், கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் இலக்கம் SML/02/16/05(Vol-IV) மற்றும் 2020.11.18 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய தகவலுக்காக
2. மாகாண பணிப்பாளர், கா.உ.சு.தி. வடக்கு/கிழக்கு மாகாணம். - தகவலுக்காக